[1979 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு ....

திரு. எம். ஏ. லத்தீப் : போட்டோக்களை நாங்கள் பார்க்க வில்லை........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போட்டோவை வேண்டுமானால் தரச் சொல்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சம்பவங்கள் நடந்தபோது போட்டோக்கள் எடுக்கப்பட்டதா ? அல்லது அதற்குப் பிறகு எடுக்கப் பட்டதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் அனுமதியில்லாமல் பேசிக்கொண்டே இருந்தால் தாங்கள் பேசுவதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்ல வேண்டிவரும்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லத்தீப் பேசியதை அவைக் குறிப்பிலிருந்தும் பத்திரிகைக் குறிப்பிலிருந்தும் நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

(5) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : 42-வது விதியின்கீழ் அனுமதித்து இருக்கிறீர்கள். நாங்கள் 42-வது விதியின் கீழ் சில முக்கியமான பிரச்னைகளைக் குறித்து, சுற்றுலா வாரியத்தில் நடக்கிற வேலை நிறுத்தம், ஆசிரியர்கள் வேலை நிறுத்தம், என்.ஜி.ஓக்கள் பிரச்னை ஆகியவற்றைப்பற்றிக் கொடுத்திருக்கிறோம். தலைவரவர்கள் அவற்றை நிராகரித்துவிட்டு 41-வது விதிக்குப் போகப்போவதாகத் தெரிகிறது. என்ன காரணத்தால் அவை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் கொடுத்திருப்பது ஆய்விலே இருக்கிறது. விவரம் வேண்டுமானால் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து ; தலைவரவர்களே, ஆசிரியர்கள் இரண்டு நாட்களாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி........

(திரு. சேலம் மு. ஆறுமுகம் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மன்றத்திலே 42-வது விதியின் கீழோ அல்லது 41-வது விதியின் கீழோ எடுத்துக்கொள்ளப்படுகின்றவைகளைத் தவிர, மற்றவைகளைப் பற்றி இன்னும் அரசுக்கு அறிக்கையோ அல்லது அரசின் பதிலோ வரவில்லை என்று பொருள். மேற்கொண்டு விவரம் தெரிய வேண்டுமென்றால் அறையிலே கேளுங்கள். அதுதான் முறை.

திரு. செ. சிவசாமி : 42-வது விதியின்கீழ் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்.

(6) கவன ஈர்ப்பு.

வெலிங்டன் ரிசர்வாயர் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு தண்ணீர் தீர்வை உயர்த்தப்பெற்றுள்ளது குறித்து.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> '' தென்னாற்காடு மாவட்டம் வெலிங்டன் ரிசர்வாயர் மூலம் தண்ணீர் பெறும் விருத்தாச்சலம் தாலுக்காவிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை உயர்த்தியதும் அதனால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் —

திரு. பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு ஆணை எண். 1399, வருவாய், 1971 ஆம் ஆண்டு மே திங்கள்